# 4

# விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

ஆண்டுச் சராசரி மற்றும் ஆண்டுக்காண்டு என்பவற்றின் அடிப்படையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு) (2006/07=100) மாற்றத்தால் அளவிடப்படும் பணவீக்கம் 2015இன் முதல் ஒன்பது மாதங்களில் தாழ் ஒற்றை இலக்க மட்டங்களில் விளங்கியது. 2015 சனவரியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் பல முக்கிய பொருட்களின் நிருவகிக்கப்பட்ட பொருட்களின் கீழ்நோக்கிய திருத்தம் மற்றும் 2014இன் தொடர்பான மாதங்களில் நிலவிய உயர் தளத்தின் விளைவு ஆண்டுக்காண்டு பணவீக்கத்தை நடுத்தர ஒற்றை இலக்க மட்டத்திற்குக் குறைவாக பேணுவதற்கு உதவின. சாதகமான பொது விலை மட்டமானது முன்மதியுடைய நாணய முகாமைத்துவம், நன்கு பேணப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள், உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளிலான சாதகமான வழங்கல் பக்கத்திலான அபிவிருத்திகள் என்பவற்றால் மேலும் உதவப்பட்டது. இதேவேளை, ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையிலான மையப் பணவீக்கம் 2015 சனவரியிலிருந்து செத்தெம்பரிற்கு படிப்படியாக அதிகரித்த போதிலும் தாழ் ஒற்றை இலக்க மட்டங்களில் விளங்கியது. 2014இன் நான்காம் காலாண்டில் பல தடவைகளில் நடைமுறைக்கு வந்த கீழ்நோக்கி நிருவகிக்கப்பட்ட விலைச் சீர்திருத்தங்களின் உயர் தளத்தின் விளைவு நீக்கப்பட்டதன் காரணமாக அதிகரித்துச் செல்லும் போக்கைக் கொண்டிருந்த போதிலும் பணவீக்கம் 2015இன் எஞ்சிய பகுதியில் தாழ்ந்த ஒற்றை இலக்க மட்டங்களில் தொடர்ந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பெயரளவுக் கூலிகளிலான அதிகரிப்பு மற்றும் நிலவிய தாழ்ந்த பணவீக்கம் என்பவற்றால் அனைத்துத் துறைகளிலுமுள்ள ஊழியர்கள் அவர்களின் உண்மைக் கூலிகளில் அதிகரிப்புக்களை அனுபவித்தனர். 2015இன் முதலரைப் பகுதியில் தொழிற்படை பங்கேற்பு வீதம் அதிகரித்துச் செல்லும் தொழிற்படையுடன் அதிகரித்தது. தொழிற்படையப் பங்கேற்பு வீதத்திலான அதிகரிப்பு பெரும்பாலும் அதிகரித்த பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பால் ஏற்பட்டிருக்கையில் ஆண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் வீழ்ச்சியடைந்தது. வயது வந்தோர் மற்றும் இளைஞர்களிடையேயான தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் அதிகரித்துச் செல்லும் போக்கு அண்மைக் காலங்களில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்கப் பண்பாகும். இதேவேளை பொருளாதாரத்தில் தொழில் வாய்ப்புக்களும் இக்காலத்தில் சிறிதளவால் அதிகரித்தது. தொழில் சந்தையிலான இவ்வபிவிருத்திகள் காரணமாக இக்காலப்பகுதியில் தொழிலின்மை வீதம் அதிகரித்தது. பெண்கள், இளைஞர்கள் மற்றும் க.பொ.த (உ.த) அல்லது உயர் கல்வி மட்டங்களைக் கொண்டிருக்கும் நபர்களிடையே காணப்படும் உயர் தொழிலின்மை வீதங்கள் கடந்த ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான போக்காகும். வெளிநாட்டுச் செலாவணியின் முக்கிய வழிமுறையாகவும் தொழிலின்மை அழுத்தத்தைத் தணிக்கும் ஒரு முறையாகவும் விளங்கும் வெளிநாட்டுத் தொழில்நிலை, வெளிநாட்டுத் தொழில்நிலைக்காகச் செல்வோரின் வீழ்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டவாறு வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, பொருளாதாரத்தில் தொழிலாளர் உற்பத்தித்திறன் வேளாண்மைத் துறையிலிருந்தான எதிர்க்கணியப் பங்களிப்புக்கு மத்தியிலும் அதிகரித்தது.

## 2015இல் அபிவிருத்திகள்

### விலைகள்

- **கொ.நு.வி. சுட்டெண்ணின் அசைவால் அளவிடப்படும் பொது விலை மட்டம் சனவரியிலிருந்து மாச்சுக்குக் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்து, ஏப்பிறலிலிருந்து யூலையிற்கு மிதமானளவில் அதிகரித்துப் பின்பு வீழ்ச்சியடைந்தது.** 2014இன் நாலாம் காலாண்டில் அவதானிக்கப்பட்ட உடன் வேளாண்மைப் பொருட்களின் வழங்கல் பற்றாக்குறைகளால் ஏற்படுத்தப்பட்ட மேல்நோக்கிய விலை அழுத்தம் 2015 சனவரி வரை தொடர்ந்தது. எனினும், 2015 சனவரியில் எரிபொருள் மற்றும் எல்பி வாயுவின் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய விலைச் சீர்திருத்தங்கள் மற்றும் பெப்புருவரியில் உடன் வேளாண்மைப் பொருட்களின் முன்னேற்றமடைந்த உள்நாட்டு வழங்கல், பெப்புருவரியிலிருந்த பொது விலை மட்டத்தைக் கீழ்நோக்கிக் கொண்டு வருவதற்கு குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்தன.

- **மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டவாறு உணவு வகையின் விலை அசைவுகள் பணவீக்கமுடையதாக விளங்குகையில் உணவல்லா வகையின் விலை அசைவுகள் பணவீக்கமற்றதாக விளங்கின.** இதன் இணைந்த விளைவு மிகச் சிறியதாக இருந்தமையால், இக்காலப்பகுதியில் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் தாழ்ந்த மட்டங்களிலேயே தொடர்ந்து விளங்கியது. 2015 யூலையிலிருந்து செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் உணவல்லா வகையிலிருந்தான எதிர்க்கணியத் தாக்கம் உணவு வகையிலிருந்தான நேர்க்கணியத் தாக்கத்தை விஞ்சியமையால் கொ.நு.வி. சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் இம்மூன்று மாதங்களிலும் எதிர்க்கணியமாகவே விளங்கியது. உணவு வகையில், குறிப்பாக, அரிசி மற்றும் மரக்கறிகள் உள்ளிட்ட வேளாண்மைப் பொருட்களின் விலைகள், பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக 2014இன் பிற்பகுதியிலிருந்து தொடங்கிய வழங்கல் பற்றாக்குறைகள் காரணமாக இவ்வாண்டின் ஆரம்பத்தில் தொடர்ந்தும் உயர்ந்து விளங்கின. உணவல்லா வகையினுள், வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்; மற்றும் போக்குவரத்து துணைச் சுட்டெண்கள் இக்காலப்பகுதியில் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கத்தை அதிகரிப்பதற்கு எதிர்மறையாக பங்களிப்புச் செய்தன. 2014 செத்தெம்பரிலிருந்து பல தடவைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட கீழ்நோக்கிய நிர்வகிக்கப்பட்ட விலைத் திருத்தங்களின் தாக்கம் இவ்விரு சுட்டெண்களையும் வீழ்ச்சியடைந்து செல்லும் பாதைக்கு இட்டுச் சென்றமையால் இக்காலப்பகுதியில் கொ.நு.வி. சுட்டெண்ணிலான ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்துக்கு எதிர்க்கணியப் பங்களிப்பை ஏற்படுத்தியது.

**அட்டவணை 4.1** கொ.நு.வி. சுட்டெண்ணின் அசைவுகள் (2014 - 2015)

2006/07=100

| காலம் | | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | | ஆண்டுச் சராசரி மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | முதன்மை | மையம் | முதன்மை | மையம் |
| 2014 | சனவரி | 4.4 | 3.5 | 6.5 | 4.1 |
| | பெப்புருவரி | 4.2 | 3.1 | 6.0 | 3.8 |
| | மாச்சு | 4.2 | 3.4 | 5.7 | 3.5 |
| | ஏப்பிறல் | 4.9 | 3.4 | 5.6 | 3.3 |
| | மே | 3.2 | 3.3 | 5.3 | 3.1 |
| | யூன் | 2.8 | 3.5 | 4.9 | 3.0 |
| | யூலை | 3.6 | 3.7 | 4.7 | 3.1 |
| | ஓகத்து | 3.5 | 3.9 | 4.5 | 3.2 |
| | செத்தெம்பர் | 3.5 | 3.7 | 4.2 | 3.2 |
| | ஒத்தோபர் | 1.6 | 3.6 | 3.8 | 3.3 |
| | நவெம்பர் | 1.5 | 3.6 | 3.5 | 3.4 |
| | திசெம்பர் | 2.1 | 3.2 | 3.3 | 3.5 |
| 2015 | சனவரி | 3.2 | 2.1 | 3.2 | 3.4 |
| | பெப்புருவரி | 0.6 | 0.8 | 2.9 | 3.2 |
| | மாச்சு | 0.1 | 1.4 | 2.5 | 3.0 |
| | ஏப்பிறல் | 0.1 | 2.4 | 2.1 | 2.9 |
| | மே | 0.2 | 2.6 | 1.9 | 2.9 |
| | யூன் | 0.1 | 2.8 | 1.7 | 2.8 |
| | யூலை | -0.2 | 3.5 | 1.3 | 2.8 |
| | ஓகத்து | -0.2 | 3.9 | 1.0 | 2.8 |
| | செத்தெம்பர் | -0.3 | 4.2 | 0.7 | 2.8 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### உணவு வகையில் விலை அசைவுகள்

- **உடன் உணவுப் பொருட்களின் வழங்கல்பக்க நிலைமைகளுக்கு அமைவாக கலப்பான போக்குகளை வெளிப்படுத்தி 2015இன் முதல் ஒன்பது மாதங்களில் உணவு வகையின் சராசரி விலைகள் அதிகரித்தன.** உணவு வகையினுள், அரிசியின் நிறையேற்றப்பட்ட சராசரி விலை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2015இன் முதல் ஒன்பது மாதங்களில் 10.5 சதவீதத்தால் அதிகரித்தது. பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக முன்னைய சிறுபோகத்தில் நெல் உற்பத்தியிலான வீழ்ச்சி, அது போல் முன்னைய பல பருவகாலங்களில் குறைந்த அறுவடைகள் காரணமாக போதுமற்ற அரிசி இருப்புக்கள் இவ்வாண்டின் ஆரம்பத்தில் அரிசியின் உயர் சராசரி விலைகளை ஏற்படுத்தின. முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 28.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த பெரும்போக அறுவடை 2015 பெப்புருவரியில் சந்தைக்கு வந்தமையால் அரிசி விலை வீழ்ச்சியடையத் தொடங்கியதுடன் 2015 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரை அரிசியின் நிறையேற்றப்பட்ட சராசரி விலையை 13.3 சதவீதத்தால் வீழ்ச்சியடையச் செய்தது. மேலும், அரிசி இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதற்கும் உள்நாட்டு வேளாண்மையாளர்களைப் பாதுகாப்பதற்கும், 2015 சனவரி 22 இலிருந்து அரிசி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ.20 இற்கும், 2015 மாச்சு 26 இலிருந்து மேலும் ரூ.40 இற்கும் அதிகரிக்கப்பட்டது. இத்துடன், 2015 மே 06 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் சிறப்புப்

**வரைபடம் 4.1 கொ.நு.வி.சு அசைவுகள் (2014-2015)**




பண்டத் தீர்வைக்குப் பதிலாக அரிசி மீது கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ.35 கொண்ட சுங்கத் தீர்வை, 11 சதவீத பெறுமதிசேர் வரி, 5 சதவீத துறைமுக வானூர்தி நிலைய அபிவிருத்தி தீர்வை மற்றும் 2 சதவீத நாட்டை கட்டியெழுப்பும் வரி போன்றன விதிக்கப்பட்டன.

- **2015இன் முதல் ஒன்பது மாதங்களில் மரக்கறிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி விலை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 19.1 சதவீதத்தால் அதிகரித்தது.** அநேகமாக அனைத்து மரக்கறிகளின் விலைகள், 2014இன் பிற்பகுதியில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளால் பயிர்ச்சேதம் மற்றும் போக்குவரத்து இடையூறுகளால் ஏற்படுத்தப்பட்ட தொடர்ச்சியான வழங்கல் பற்றாக்குறைகளால் சனவரியில் உச்சநிலையிலும் பெப்புருவரியில் சார்பு ரீதியில் உயர்வாகவும் காணப்பட்டன. எனினும், 2015இன் முதல் மாதங்களில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகள் மரக்கறித் துணைத் தொகுதியின் நிறையேற்றப்பட்ட சராசரி விலையை 2015 சனவரியுடன் ஒப்பிடுகையில் செத்தெம்பரில் 25.8 சதவீதத்தால் வீழ்ச்சியடையச் செய்தன. இதேவேளை, உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தைப் பயிரிடும் வேளாண்மையாளர்களைப் பாதுகாப்பதற்குத் தொடர்பான பயிர்களின் அறுவடை காலப்பகுதிகளில் இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை அதிகரிக்கப்பட்டது. மீளாய்வுக்குரிய காலப்பகுதியில், தேங்காயின் சராசரி விலை அதிகரித்திருக்கையில் தேங்காய் எண்ணெயின் விலை 2014இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது. 2015 சனவரியிலிருந்து மாச்சு வரை சார்பு ரீதியில் உயர் மட்டங்களில் தொடர்ந்து விளங்கிய தேங்காயின் விலை பருவகாலக் காரணிகள் காரணமாக பின்பு மிதமான வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இப்பருவகாலத்தில் தேங்காய் விலையிலான வீழ்ச்சி சார்பு ரீதியில் குறைவாக விளங்கியமைக்கு முன்னைய ஆண்டுகளில் நிலவிய வரட்சி நிலைமைகளின் காலம் தாழ்த்திய விளைவு மற்றும் தெங்கு பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து தேங்காய்க்கான அதிகரித்த கேள்வி காரணமாக விளங்கின. இவ்விலை அபிவிருத்திகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2015இன் முதல் ஒன்பது மாதங்களில் 13.8 சதவீத அதிகரிப்பை விளைவித்தது. இதேவேளை, மீளாய்வுக்குரிய காலப்பகுதியின் முதல் ஒன்பது மாதங்களில் பிரதியீட்டுப் பொருளான தாவர எண்ணெயின் விலைகளின் வீழ்ச்சிக்கு அமைவாக தேங்காய் எண்ணெயின் விலையும் 2.7 சதவீதத்தால் மிதமானளவில் வீழ்ச்சியடைந்தது. உடன் மீன் மற்றும் கடல் உணவின் நிறையேற்றப்பட்ட சராசரி விலை 2015இன் முதல் ஒன்பது மாதங்களில் 6.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. 2014இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் முதல் ஏழு மாதங்களில் ஆழ்கடல் மீன் உற்பத்தியில் 1.8 சதவீத வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. உடன் மீனின் நிறையேற்றப்பட்ட சராசரி விலை 2015 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரை 9.2 சதவீதத்தால் அதிகரித்தது. 2015 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரை கோழி இறைச்சியின் விலை 9.9 சதவீதத்தால் அதிகரித்தது. முட்டையின் விலையும் இக்காலப்பகுதியில் 12.8 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்விலை அதிகரிப்புக்கள் கோழித்தீன் விலைகள் உள்ளிட்ட அதிகரித்த உற்பத்திச் செலவால் ஏற்பட்டன. எனினும், கொ.நு.வி சுட்டெண் கூடையில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளுக்கு குறித்துரைக்கப்பட்ட நிறைகள் சார்பு ரீதியில் குறைவாக இருப்பதால் கொ.நு.வி. சுட்டெண் மீதான இவ்விலைத் திருத்தங்களின் தாக்கம் இக்காலப்பகுதியில் மிகவும் குறைவாக விளங்கியது. 2015இன் முதல் ஒன்பது மாதங்களில் இறக்குமதி செய்யப்பட்ட சில பொருட்களின் விலைகள், உச்சமட்ட சில்லறை விலை விதிக்கப்பட்டமை மற்றும் பன்னாட்டுச் சந்தையிலான விலை அசைவுகளுடன் இணங்கிச் சென்றமையால் வீழ்ச்சியடைந்தன. இதன்படி 2015இன் முதல் ஒன்பது மாதங்களில் பால் மா, சீனி, பயறு மற்றும் கோதுமை மாவின் விலை 2014இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 8.4 சதவீதம், 15.2 சதவீதம், 14.4 சதவீதம் மற்றும் 10.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கோதுமை மாவில் ஏற்பட்ட விலை குறைப்பால் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் பாணின் விலையும் 7.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், 2015இன் முதல் ஒன்பது மாதங்களில் பருப்பின் விலை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 14.0 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, ரூபாவின் பெறுமானத் தேய்வு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைகள் மீது ஓரளவு அழுத்தத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

### உணவல்லா வகையில் விலை அசைவுகள்

- **திரவ எரிபொருள், எல்பி வாயு மற்றும் பேருந்துக் கட்டணங்களின் நிருவகிக்கப்பட்ட விலைகள் குறிப்பிடத்தக்களவில் கீழ்நோக்கித் திருத்தப்பட்டமை மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் பொது விலை மட்டத்தை மிதமடையச் செய்வதற்கு பெரிதும் பங்களிப்புச் செய்தன.** டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெயின் விலைகள் 2015 சனவரி 22 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் லீற்றர் ஒன்றுக்கு முறையே ரூ.16, ரூ.33 மற்றும் ரூ.16 ஆல் குறைக்கப்பட்டன. மண்ணெண்ணெயின் விலை 2015, சனவரி 30 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் மேலும் லீற்றர் ஒன்றுக்கு ரூ.6 ஆல் குறைக்கப்பட்டது. இதேவேளை, 12.5 கிலோக்கிறாம் எல்பி வாயுவின் விலை 2015 சனவரி 30 மற்றும் 2015 யூலை 15 இலிருந்து முறையே ரூ.300 ஆலும் ரூ.100 ஆலும் கீழ்நோக்கித் திருத்தப்பட்டது. எரிபொருள் விலைகளிலான கீழ்நோக்கிய சீராக்கங்களுடன் இணைந்து செல்லும் வகையில் 2015 பெப்புருவரி 01 இலிருந்து பேருந்துக் கட்டணங்களும் 8.2 சதவீதத்தால் குறைக்கப்பட்டன.

### மையப் பணவீக்கம்

- **மையப் பணவீக்கம் ஆண்டுச் சராசரி அடிப்படையில் சனவரியிலான 3.4 சதவீதத்திலிருந்து 2015 யூனில் 2.8 சதவீதத்திற்கு மெதுவடைந்து 2013 யூனிலிருந்து அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கை நீடித்து 2015 யூனிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் இதே மட்டமான 2.8 சதவீதத்தில் நிலையாகக் காணப்பட்டது.** இதேவேளை, ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கம் சனவரியிலிருந்து பெப்புருவரிக்கு வீழ்ச்சியடைந்து பின்பு 2015 செத்தெம்பரில் 4.2 சதவீதத்திற்குப் படிப்படியாக அதிகரித்தது.

### கூலிகள்

#### அரச துறைக் கூலிகள்

- **2015இன் முதல் எட்டு மாதங்களில் அரச துறை ஊழியர்களின் பெயரளவு கூலி வீதச் சுட்டெண் (2012 = 100) 2014இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 9.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 31.8 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.** இவ்வதிகரிப்பு, அனைத்து அரச துறை ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூ.10,000 கொண்ட மொத்த இடைக்காலப் படியால் ஏற்பட்டதுடன், இதில் ரூ.3,000 2014 நவெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 2015 வரவு செலவுத்திட்டத்திலிருந்து வழங்கப்பட்டது. மேலும், ரூ.5,000 மற்றும் ரூ.2,000 கொண்ட அதிகரிப்புக்கள் 2015 பெப்புருவரி மற்றும் 2015 யூனிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 2015 பெப்புருவரியின் இடைக்கால வரவு செலவுத்திட்டத்தால் வழங்கப்பட்டன. இதன் விளைவாக, மூத்த மட்டம், மூன்றாம் மட்டம், இரண்டாம் மட்டம் மற்றும் முதன்மை மட்டத்திலுள்ள ஊழியர்கள் 2014இன் தொடர்பான காலப்பகுதியின் 6.6 சதவீதம், 9.4 சதவீதம், 10.0 சதவீதம் மற்றும் 10.5 சதவீத அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2015இன் முதல் எட்டு மாதங்களில் முறையே 21.4 சதவீதம், 28.1 சதவீதம், 32.3 சதவீதம் மற்றும் 36.9 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க பெயரளவுக் கூலி அதிகரிப்புக்களைப் பெற்றனர்.

- **ஒட்டுமொத்த அடிப்படையில், 2015இன் முதல் எட்டு மாதங்களில் அரச துறை ஊழியர்களின் உண்மைக் கூலிகளும் 31.2 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன.** பெயரளவுக் கூலிகளிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் இக்காலப்பகுதியில் நிலவிய குறைந்த பணவீக்கம் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 5.8 சதவீதம் கொண்ட உண்மைக் கூலி அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் உண்மைக் கூலிகளில் இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பை விளைவித்தன. இதன்படி மூத்த மட்டம், மூன்றாம் மட்டம், இரண்டாம் மட்டம் மற்றும் முதன்மை மட்டத்திலுள்ள ஊழியர்கள் 2014இன் தொடர்பான காலப்பகுதியின் முறையே 2.7 சதவீதம், 5.4 சதவீதம், 5.9 சதவீதம் மற்றும் 6.4 சதவீத அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2015இன் முதல் எட்டு மாதங்களில் முறையே 20.8 சதவீதம், 27.5 சதவீதம், 31.7 சதவீதம் மற்றும் 36.3 சதவீதம் கொண்ட உண்மைக் கூலி அதிகரிப்புக்களைப் பெற்றனர். 2010 இலிருந்து 2013 வரையான காலப்பகுதியில் உண்மைக் கூலிகளிலான ஓரளவு தேய்வுடன் ஒப்பிடுகையில் 2014 மற்றும் 2015இல் அரச துறை உண்மைக் கூலிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது.

#### முறைசார் தனியார் துறைக் கூலிகள்

- **2015இன் முதல் எட்டு மாதங்களில் முறைசார் தனியார் துறையின் பெயரளவு கூலிவீதச் சுட்டெண் 2014இன் அதே காலப்பகுதியின் 2.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.3 சதவீதத்தால் அதிகரித்தது.** இக்கூலி அசைவுகள் கூலி நிர்ணயச் சபைகளின் ஒழுங்கு விதிகளால் நிர்வகிக்கப்படும் ஊழியர்களின் ஆகக்குறைந்த கூலிவீதச் சுட்டெண்ணால் (1978=100) அளவிடப்படுகின்றன. கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை மற்றும் பணிகள் துறைகளிலுள்ள தொழிலாளர்களின் பெயரளவுக் கூலிகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் ஏற்பட்ட முறையே 11.2 சதவீதம் மற்றும் 4.9 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2015இன் முதல் எட்டு மாதங்களில் மாற்றமின்றி காணப்பட்டது. ஆகையால் முறைசார் தனியார் துறையில் ஏற்பட்ட ஒட்டு

மொத்த அதிகரிப்பு, வேளாண்மைத்துறையில் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் ஏற்பட்ட 1.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இன் முதல் எட்டு மாதங்களில் ஏற்பட்ட 5.7 சதவீத அதிகரிப்பினாலேயே ஏற்பட்டது. இறப்பர் வளர்ப்பு மற்றும் தயாரிப்பு துறைகளில் உள்ள ஊழியர்களின் ஆகக்குறைந்த கூலிகளில் 2014இன் ஒத்தோபரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- **ஒட்டுமொத்தமாக முறைசார் தனியார் துறை ஊழியர்கள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் ஏற்பட்ட 0.9 சதவீத உண்மைக் கூலி தேய்வுடன் ஒப்பிடுகையில் 2015இன் மீளாய்வுக் காலப்பகுதியில் 3.8 சதவீத உண்மைக்கூலி அதிகரிப்புக்களை அனுபவித்தனர்.** வேளாண்மைத் துறை ஊழியர்களின் உண்மைக் கூலிகளும் 2014இன் தொடர்பான காலப்பகுதியின் 2.7 சதவீத உண்மைக்கூலி தேய்வுடன் ஒப்பிடுகையில் 2015இன் முதல் எட்டு மாதங்களில் 5.2 சதவீதத்தால் அதிகரித்தன. கைத்தொழில் மற்றும் வர்த்தகம் மற்றும் பணிகள் துறையின் ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் இக்காலப்பகுதியில் மாற்றமின்றி தொடர்ந்தமையால் அவர்களின் உண்மைக் கூலிகள் 0.5 சதவீதத்தால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.

### முறைசாராத் தனியார்துறைக் கூலிகள்

- **முறைசாரா தனியார் துறையிலுள்ள தொழிலாளர்கள், மத்திய வங்கியின் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்ட சராசரி நாளாந்தக் கூலிகளால் அளவிடப்பட்டவாறு 2014இன் தொடர்பான காலப்பகுதியின் 5.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் முதல் எட்டு மாதங்களில் 8.0 சதவீதம் கொண்ட பெயரளவுக் கூலி அதிகரிப்பைப் பெற்றனர்.** முறைசாரா தனியார் துறையினுள், வேளாண்மைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் 2014இன் தொடர்பான காலப்பகுதியின் 5.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2015இன் முதல் எட்டு மாதங்களில் 8.1 சதவீதம் கொண்ட நாளாந்த கூலி அதிகரிப்பை அனுபவித்தனர். இக்காலப்பகுதியில், வேளாண்மைத் துறையின் தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் நெல் துணைத் துறைகளிலுள்ள ஊழியர்களின் சராசரி நாளாந்தக் கூலிகள் முறையே 9.5 சதவீதம், 6.0 சதவீதம், 5.5 சதவீதம் மற்றும் 12.3 சதவீதத்தால் அதிகரித்தன. கட்டடவாக்கத் துறையிலுள்ள கொத்தனார் மற்றும் தச்சர்கள் பெயரளவு நியதிகளில் முறையே 6.6 சதவீதம் மற்றும் 7.2 சதவீதம் அதிகரிப்புக்களை அனுபவித்து கட்டடவாக்கத் துறையில் 6.9 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த நாளாந்த கூலி அதிகரிப்புக்கு இட்டுச்சென்றது.

- **உண்மை நியதிகளில், முறைசாராத் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் கூலிகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 1.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2015இன் முதல் எட்டு மாதங்களில் 7.5 சதவீதத்தால் அதிகரித்தன.** முறைசாராத் தனியார் துறையிலுள்ள துணை வகைகளைக் கவனத்திற் கொள்கையில், தேயிலை, இறப்பர், தெங்கு, கொத்தனார் மற்றும் தச்சர் துணைத் துறைகள் அவற்றின் உண்மைக் கூலிகளில் முறையே 9.0 சதவீதம், 5.5 சதவீதம், 5.1 சதவீதம், 6.1 சதவீதம் மற்றும் 6.7 சதவீத அதிகரிப்புக்களை அனுபவித்தனர். நெல் துறையிலுள்ள ஊழியர்கள் 2014இன் தொடர்பான காலப்பகுதியின் 0.7 சதவீதம் கொண்ட உண்மைக் கூலித் தேய்வை அடைந்த பின்பு அவர்களின் உண்மைக் கூலிகளில் 11.8 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பை அனுபவித்தனர்.

### தொழிற்படை

- **முழுத்தீவையும் உள்ளடக்கும் விதத்தில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்படும் காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, 15 வயதும் அதற்குக்கூடிய வயதுடைய பொருளாதார ரீதியாக செயற்பாட்டிலிருக்கம் குடித்தொகையை உள்ளடக்கும் தொழிற்படை 2014இன் தொடர்பான காலப்பகுதியின் 8.791 மில்லியனிலிருந்து 2015இன் முதலரைப் பகுதியில் 8.968 மில்லியனுக்கு 2.0 சதவீதத்தால் அதிகரித்தது.** தொழிற்படையிலான அதிகரிப்பு பெரும்பாலும் தொழிற்படைக்கு உயர் எண்ணிக்கையில் பெண்களின் நுழைவால் ஏற்பட்டது. பொருளாதார ரீதியாக செயற்பாட்டிலிருக்கும் பெண்களின் குடித்தொகையிலான இவ்வதிகரிப்பு நகர, கிராமிய மற்றும் பெருந்தோட்டம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் அவதானிக்கப்பட்டது. இதேவேளை, நகரத் துறையில் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் கிராமியத் துறையிலான மிகச் சிறிய வீழ்ச்சி காரணமாக பொருளாதார ரீதியாக செயற்பாட்டிலிருக்கும் ஆண்களின் குடித்தொகை ஒட்டுமொத்த அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது.

- **15 வயதுக்கும் அதற்குக்கூடிய வயதுடைய குடும்ப அலகுக் குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதமான தொழிற்படை பங்கேற்பு வீதம் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 53.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இன் முதலரைப் பகுதியில் 54.0 சதவீதத்துக்குச் சிறிதளவால் அதிகரித்தது.** இவ்வதிகரிப்பு பெரும்பாலும் 2014இன் முதலரைப் பகுதியின் 35.1 சதவீதத்திலிருந்து 2015இன் முதலரைப் பகுதியில் 36.6 சதவீதத்துக்கு அதிகரித்த பெண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதத்தால் ஏற்பட்டது. இவ்வதிகரிப்பு 15-29 வயதுகள், 35-39 வயதுகள் மற்றும் 50 வயதும் அதற்குக்கூடிய வயதுடைய வயதுக் குழுக்களிலுள்ள

அட்டவணை 4.2 தொழிற்படை, தொழில் நிலை மற்றும் தொழில் வாய்ப்பின்மை (அ)

| விடயம் | 2014 | | 2015 (ஆ) | |
|---|---|---|---|---|
| | முதலாம் அரையாண்டு | ஆண்டு | முதலாம் அரையாண்டு | எறிவுகள் |
| குடும்ப அலகுகளின் குடித்தொகை '000 (15 வயதும் அதற்கு மேலும்) | 16,437 | 16,532 | 16,623 | 16,664 |
| தொழிற்படை, '000 | 8,791 | 8,805 | 8,968 | 8,999 |
| தொழில் நிலை ' 000 | 8,410 | 8,424 | 8,552 | 8,594 |
| தொழில் வாய்ப்பின்மை '000 | 381 | 381 | 416 | 405 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (குடும்ப அலகுகளின் குடித்தொகை % மாக) | 53.5 | 53.3 | 54.0 | 54.0 |
| தொழிலற்றோர் வீதம் (தொழிற்படையின் % மாக) | 4.3 | 4.3 | 4.6 | 4.5 |

(அ) தரவுகள் முழுத்தீவையும் உள்ளடக்கியுள்ளது.
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

பெண்களின் அதிகரித்த பங்கேற்பால் ஏற்பட்டது. 30-44 வயதுக் குழுவின் ஆண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதத்திலான வீழ்ச்சி காரணமாக 2015இன் முதலரைப் பகுதியில் ஆண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதம் 2014இன் முதலரைப் பகுதியிலான 74.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 74.4 சதவீதத்திக்கு வீழ்ச்சியடைந்தது. இருந்தபோதிலும் 60 வயதும் அதற்குக்கூடிய வயதுடைய ஆண்கள் மற்றும் பெண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டமை தொழிலுக்கமர்த்தப்பட்ட அல்லது தொழில் விரும்பும் வயது வந்தோரின் விகிதாசாரம் அதிகரித்துச் செல்வதை எடுத்துக்காட்டுகிறது. இளைஞர்களுக்கிடையேயான (15-24 வயதுகளுக்கிடையேயான ஆட்கள்) தொழிற்படை பங்கேற்பு வீதமும் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் போக்கைக் காட்டுகிறது.

## தொழில்நிலை

- **2015இன் முதலரைப் பகுதியில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை 2014இன் தொடர்பான காலப்பகுதியின் 8.410 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இன் முதலரைப் பகுதியில் 8.552 மில்லியனுக்கு 1.7 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்தது.** தொழிலுக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு, 2014இன் முதலரைப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் பொருளாதாரச் செயற்பாடுகளின் மீட்சியுடன் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட 7.7 சதவீத அதிகரிப்பால் ஏற்பட்டது. இதேவேளை, பணிகள் துறையில் தொழிலுக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 0.7 சதவீதத்தால் சிறிதளவாக அதிகரித்திருக்கையில் கைத்தொழில் துறையில் இவ்வெண்ணிக்கை 2.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கைத்தொழில் துறையின் பொருளாதாரச் செயற்பாடுகள் இத்துறையில் தொழில் வாய்ப்புக்களை மட்டுப்படுத்திய முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட எதிர்க்கணிய வளர்ச்சியிலிருந்து மீட்சியடைந்தது. எனினும் பணிகள் துறையிலான செயற்பாடுகள் தொழிலுக்கமர்த்தப்பட்ட எண்ணிக்கையிலான சிறு அதிகரிப்புடன் அதிகரித்ததுடன் இத்துறையில் தொழிலாளர் உற்பத்தித்திறனில் மேம்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

- **தொழில்நிலை நியதிகளில், தனியார் துறை, தொழில்தருநர் மற்றும் சுயதொழில் செய்வோர் வகைகளில் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கையில் அரச துறை மற்றும் பணம் செலுத்தப்படாத குடும்பத் தொழிலாளர் வகைகளில் இவ்வெண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது.** மொத்த தொழில்நிலையில் 15.2 சதவீத பங்கிற்கு வகைகூறும் அரச துறை தொழில்நிலை 1.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வேளாண்மை வகையிலான வீழ்ச்சியுடன் தொழில்தருநர்களின் எண்ணிக்கை 3.8 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்தத் தொழில்நிலையில் தொழில்தருநர் வகை 2.9 சதவீதத்திற்கு வகைகூறியது. மொத்த தொழில்நிலையில் ஆகக்கூடிய 41.1 சதவீத பங்கைக் கொண்டிருக்கும் தனியார் துறையில் தொழிலுக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை வேளாண்மை தொடர்பான தனியார் துறைச் செயற்பாடுகளிலுள்ள தொழில்நிலையின் அதிகரிப்பால் 2.0 சதவீதத்தால் அதிகரித்தது. சுயதொழில் செய்யும் ஆட்களின் எண்ணிக்கை வேளாண்மை மற்றும் வேளாண்மையற்ற வகை ஆகிய இருவகைகளிலும் அதிகரித்து 4.4 சதவீதம் கொண்ட மொத்த அதிகரிப்பை விளைவித்ததுடன் இது மொத்த தொழில்நிலையில் 32.5 பங்குக்கு வகைகூறியது. வேளாண்மை மற்றும் வேளாண்மையற்ற துறைகள் இரண்டிலுமான செயற்பாடுகளிலான வீழ்ச்சியுடன் பணம் செலுத்தப்படாத குடும்பத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 5.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## தொழிலின்மை

- **2015இன் முதலரைப்பகுதியில் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 4.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீதத்துக்கு அதிகரித்தது.** மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களின் மொத்த எண்ணிக்கை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.381 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 0.416 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 9.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்பு பெரும்பாலும் 2015இன் முதலாம் காலாண்டில் தொழிலுக்கமர்த்தப்படாத பெண்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட 25.3 சதவீத அதிகரிப்பால் ஏற்பட்டது. இது பெண்களின் வேலையின்மை வீதம் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.4 சதவீதத்திலிருந்து 2015இன் முதலரைப் பகுதியில் 7.6 சதவீதத்துக்கான அதிகரிப்புக்கு வழியமைத்தது. தொழிலுக்கமர்த்தப்படாத ஆண்களின் எண்ணிக்கை 8.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ஆண்களின் தொழிலின்மை வீதத்தில் 2014இன் முதலரைப் பகுதியின் 3.2 சதவீதத்திலிருந்து 2015இன் முதலரைப் பகுதியில் 3.0 சதவீதத்துக்கான வீழ்ச்சியை விளைவித்தது.

- **வயது அடிப்படையில் நோக்குகின்ற போது 25 - 29 இற்கிடையேயான வயதுடைய ஆட்களை விட அனைத்து வயது வகைகளிலும் தொழில்நிலை வீதங்களில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.** இளைஞர் (15 - 24 இடையேயான வயதுடையோர்) தொழிலின்மை இக்காலப்பகுதியில் 21.6 சதவீதத்தை அடைந்து தொடர்ந்து உயர் மட்டத்தில் விளங்கியது. இவ்வயதுத் தொகுதியிலிருந்தான தொழிற்படை பங்கேற்பு 1 மில்லியன் ஆட்களைவிடக் கூடுதலாகக் கொண்டிருந்தது. 30 - 39 வயது மற்றும் 40 வயதும் அதற்குக்கூடிய வயதுத் தொகுதியினர் இக்காலப்பகுதியில் முறையே 2.9 சதவீதம் மற்றும் 1.0 சதவீத தொழிலின்மை வீதங்களைப் பதிவுசெய்தனர். 40 வயதும் அதற்குக் கூடிய வயதுத் தொகுதியின் தொழிற்படை பங்கேற்பு வீதம் 4.8 மில்லியன் ஆட்கள் கொண்ட ஆகக்கூடிய எண்ணிக்கையைக் கொண்டிருந்தது.

- **கல்வி மட்டத்தின் அடிப்படையில், க.பொ.த. (உ.த.) மற்றும் இதற்குக் கூடுதலான தகைமையைக் கொண்ட ஆட்களிடையே 9.3 சதவீதம் கொண்ட ஆகக்கூடிய தொழிலின்மை வீதம் பதிவு செய்யப்பட்டதுடன், இது முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 7.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும்.** இது தொழிற்சந்தையில் தேர்ச்சிகளின் பொருத்தப்பாடின்மைக் கரிசனையின் பகுதிக் காரணமாக இவ்வயதுத் தொகுதி வழமையாக ஆகக்கூடிய தொழிலின்மை வீதங்களைப் பதிவு செய்வதைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இதேவேளை, பாடசாலை செல்லும் 6 - 10 வயதுகளை உடைய ஆட்களிடையேயான தொழிலின்மை வீதம் 3.4 சதவீதத்தில் மாற்றமின்றி தொடர்ந்து விளங்குகையில் க.பொ.த. (சா.த.) சித்தியடைந்தோரிடையே இது 6.2 சதவீதத்திலிருந்து 6.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## வெளிநாட்டுத் தொழில்நிலை

- **இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான வெளிச்செல்லல்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு மத்தியிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முக்கிய வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்களில் ஒன்றாக தொடர்ந்து விளங்கியது.** 2015இன் முதலரைப் பகுதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான வெளிச்செல்லல்கள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 14.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி ஆண் மற்றும் பெண் தொழிலாளர்கள் வெளிச்செல்லல்களில் அவதானிக்கப்பட்டதுடன், இது மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் 13.9 சதவீதத்தாலும் 16.3 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. வெளிச்செல்லல்களில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு இலங்கையின் வெளிநாட்டு தொழில் செய்வோரின் அதிகளவானோர் சேருமிடமாக விளங்கும் மத்திய கிழக்கு நாடுகளில், பன்னாட்டு சந்தையில் ஏற்பட்ட எண்ணெய் விலையின் வீழ்ச்சியால் ஏற்பட்ட பொருளாதார மந்தம் மற்றும் இப்பிராந்தியத்திற்குள் ஏற்பட்டிருந்த முரண்பாடுகளின் கசிவுத்தாக்கத்தால் விளைவிக்கப்பட்ட சமூக மற்றும் பாதுகாப்பு கரிசனைகளே பகுதியளவில் காரணமாயின.

- **தேர்ச்சியின் வகைப்படி, தேர்ச்சி பெற்ற மற்றும் ஓரளவு தேர்ச்சி பெற்ற வகைகள் தவிர்ந்த அனைத்து வகைகளின் கீழான தொழிலாளர் வெளிச்செல்லல்கள் வீழ்ச்சியடைந்தன.** மத்திய தரம் மற்றும் எழுதுவினைஞர் மற்றும் இது தொடர்பான வகைகளின் கீழான தொழிலாளர் வெளிச்செல்லல்கள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. உயர்தேர்ச்சி வகைகளிலுள்ள தொழிலாளர்கள் கூடிய வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இருப்பினும், பணிப்பெண்கள் வகையின் கீழான தொழிலாளர் வெளிச்செல்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் வெற்றியை வெளிப்படுத்தும் வகையில் பணிப்பெண்களின் வெளிச்செல்கைகள் 17.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

## தொழிலாளர் உறவுகள்

- **2015இன் முதலரைப் பகுதியில் தனியார் துறையில் இடம்பெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை மற்றும் வேலை நிறுத்தங்களில் பங்கேற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது.** தனியார் துறையில் இடம்பெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை

25 இலிருந்து 9 இற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் 2015இன் முதலரைப் பகுதியில் வேலைநிறுத்தங்களில் பங்கேற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 4,063 இலிருந்து 2,939 இற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிகள் பெருந்தோட்டம் மற்றும் ஏனைய துறைகள் இரண்டிலும் அவதானிக்கப்பட்டது. இருந்தபோதிலும் ஒட்டுமொத்த அடிப்படையில் வேலைநிறுத்தங்கள் காரணமாக இழக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கையின் தொழிலாளர் உறவுகள் மோசமடைந்தன. இழக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை 2014இன் முதலரைப் பகுதியின் 15,818 இலிருந்து 2015இன் தொடர்பான காலப்பகுதியில் 19,110 இற்கு 20.8 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு பெரும்பாலும் பெருந்தோட்டத் துறையில் நிகழ்ந்த வேலைநிறுத்தங்களால் ஏற்பட்டது.

### தொழிலாளர் உற்பத்தித்திறன்

- **வேலை செய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றுக்கான (2010 விலைகளில்) பெறுமதிகூட்டலால் அளவிடப்படும் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2014இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ409.00 உடன் ஒப்பிடுகையில் 2015இன் முதலரைப் பகுதியில் 2.1 சதவீதத்தால் அதிகரித்து ரூ417.52 ஐ அடைந்தது.** தொழிலாளர் உற்பத்தித்திறனிலான 6.0 சதவீத வளர்ச்சியுடன் தொழிலாளர் வளத்தின் வினைத்திறன்மிக்க பயன்பாட்டை பணிகள் துறை எடுத்துக்காட்டியது. பெறுமதிகூட்டப்பட்ட வளர்ச்சி மிகச் சிறியதாக விளங்கிய போதிலும் மற்றும் கைத்தொழில் துறையில் வேலைசெய்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்த போதிலும் இத்துறை 3.5 சதவீதம் கொண்ட உற்பத்தித்திறன் வளர்ச்சியைப் பதிவுசெய்தது. வேளாண்மைத் துறையில் வேலைசெய்த ஆட்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால் வேலைசெய்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. பெறுமதிகூட்டலிலான வளர்ச்சி உற்பத்தித்திறனில் வளர்ச்சியைப் பதிவு செய்வதற்கு போதுமானதாக இருக்கவில்லை. எனவே, வேளாண்மைத் துறையில் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2015இன் முதலரைப் பகுதியின் 8.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## 2016 இற்கான வாய்ப்புகள்

### விலைகள்

- **பணவீக்கத்தின் உத்தியோகபூர்வமான அளவீடாகப் பயன்படுத்தப்படும் கொ.நு.வி.சுட்டெண்ணின் (2006/07=100) அசைவின் அடிப்படையில் இவ்வாண்டின் எஞ்சிய பகுதியில் பணவீக்கம் தாழ்ந்த நடுத்தர ஒற்றை இலக்க மட்டங்களில் தொடர்ந்து இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** நன்கு கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள், முன்மதியுடைய நாணய முகாமைத்துவம், குறிப்பாக மசகெண்ணெய், விலைகள் பன்னாட்டுப் பொருட்களின் விலைகள் மெதுவடைதல் மற்றும் சாதகமான உள்நாட்டு வழங்கல் நிலைமைகள் பொதுவிலை மட்டத்தை சாதகமான மட்டங்களில் பேண உதவும். இதேவேளை பன்னாட்டுச் சந்தைகளில் விலைகளின் கீழ்நோக்கிய போக்கு எதிர்மாறாக வந்தால் ரூபாவின் அண்மைய பெறுமானத்தேய்வுடன் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது ஓரளவு விலை அழுத்தம் எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மைப் பொருட்களின் எதிர்வுகூறமுடியாத எந்தவொரு வழங்கல் பற்றாக்குறையும் குறுகிய காலத்தில் இறக்குமதிகளை ஊக்குவிக்கும் நேரம் பிந்தாத இறைக் கொள்கை வழிமுறைகளுடாக முகாமை செய்யப்படவேண்டும். மேலும், இவ்வபிவிருத்திகளுடன் 2014இன் நாலாம் காலாண்டில் பலமுறைகளில் நடைமுறைக்குவந்த கீழ்நோக்கிய நிருவாக விலை மீளாய்வுகளின் உயர் தளவிளைவு நீக்கப்பட்டமையால் பணவீக்கம் 2015இன் நான்காம் காலாண்டிலிருந்து 2016 ஆண்டுக்கு மேல்நோக்கிச் செல்லுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### கூலிகள் மற்றும் உற்பத்தித்திறன்

- **பொருளாதாரத்தில் உண்மைக் கூலிகள் எதிர்வரும் மாதங்களில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** உற்பத்தியாளர்களுக்கான போட்டித்தன்மை வாய்ந்த செயலை உறுதிப்படுத்துவதற்கு நீண்ட காலத்தில் உண்மைக் கூலிகளிலான வளர்ச்சி உற்பத்தித்திறனிலான வளர்ச்சியுடன் பொருத்தப்பட்டுள்ளதாக இருக்க வேண்டும். ஏனெனில், இது உள்நாட்டுச் சந்தையில் பணவீக்கத்தை ஏற்படுத்தி இறுதியில் நீண்ட காலத்தில் கூலி விலைகள் படிப்படையாக அதிகரிப்பதற்கு வழியமைக்கும். உற்பத்தித்திறன் வளர்ச்சியில்லாத உண்மைக் கூலி அதிகரிப்புக்கள் குறிப்பாக வேளாண்மைத் துறையில் போட்டித்தண்மையைத் தடுகின்றன. எனவே, கூலி வீதத்தை தீர்மானிப்பவை எதிர்காலத்தில் ஊக்குவிப்புகளுடன் இணைந்த உற்பத்தித்திறனுடன் இணைந்திருக்க வேண்டும். மேலும் செயல்திறனற்ற ஊழியர்களை அவர்களால் சாதகமான பங்களிப்பை வழங்கமுடியுமான செயற்பாடுகளுக்கு நெறிப்படுத்துதலும் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும். மேலும், உற்பத்தித்திறன் மிக்க அரசதுறை தனியார் துறையின் உத்வேகத்தை வசதிப்படுத்துவதால் அரச துறைக் கூலிகளும் உற்பத்தித்திறனுடன் இணைந்திருக்க வேண்டும்.

### தொழிற்படை மற்றும் தொழில்நிலை

- **பெண்கள் மற்றும் முதியவர்களின் அதகரித்த தொழிற்படைப் பங்கேற்பு தொழிலின்மை வீதத்தில் ஓரளவு மேல்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும்.** கூடிய கல்வித் தகைமைகளைக் கொண்ட ஆட்களுக்கிடையேயான உயர்

தொழிலின்மை வீதங்களால் பிரதிபலிக்கப்பட்டவாறு இந்நிலைமை தொழிற்சந்தையில் தேர்ச்சியின் பொருத்தப்பாடின்மையால் மேலும் மோசமடையக்கூடும். மத்திய வங்கியால் நடத்தப்பட்ட வியாபார தோற்றப்பாடு அளவீட்டால் வெளிப்படுத்தியவாறு தொழில்தருநர்கள் அவர்களது நிறுவனங்களில் நடைமுறையிலிருக்கும் தொழில் வாய்ப்புக்களை நிரப்புவதற்கு பொருத்தமான ஊழியர்களை சேர்ப்பது அவர்களுக்கு கடினமாக இருக்கும் காலம் காலமாக அவர்களது நிறுவனங்களில் ஊழியர் பற்றாக்குறை காணப்படுவதால் அண்மைக் காலத்தில் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் அவர்களின் நோக்கம் அநேகமாக சாதகமாவவே காணப்படுகிறது. இது தொழில் சந்தையில் நிரம்பல் மற்றும் கேள்வி பொருத்தப்பாட்டின்மையை எடுத்துக்காட்டுவதுடன், இது உள்ளார்ந்த வளமிக்க பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு பொருத்தமான தேர்ச்சி ஒழுங்குபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கூடாக திருத்தப்பட வேண்டும்.

- **முதியோர் குடித்தொகையில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து, முதியோர்களிடையேயான (60 வயதும் அதற்குக் கூடியவர்களும்) தொழிற்படை பங்கேற்பு வீதத்திலான அதிகரிப்பு வாழ்வதற்கு எந்தவொரு அல்லது போதிய வருமான வழிகளைக் கொண்டிராத வயதான மக்களில் ஏற்படும் அதிகரிப்பையும் சுட்டிக்காட்டுகிறது.** உடனடியாக ஏற்படக்கூடிய வயதானவர்களின் குடித்தொகை, உரிய ஓய்வூதிய நன்மைகள், சமூக பாதுகாப்பு வலையமைப்பு, நலக் காப்புறுதித் திட்டங்கள் இல்லாமை மற்றும் தொழிற்சந்தையில் நடைமுறையிலிருக்கும் பொருத்தப்பாடின்மை என்பவற்றால் இந்நிலைமை மேலும் மோசமடையலாம். வயதானோர் செயலகத்தால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட சமுதாயத் தோட்டம் செய்தல், கைப்பணிகள் மற்றும் நிபுணத்துவ பணிகள் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற வயதானோருக்கான வருமானம் உழைக்கும் வழிமுறைகள் வயதான மக்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் கௌரவமான வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கு அரச மட்டத்திலான கரிசனையுடன் மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

- **இளைஞர்கள் மற்றும் உயர்மட்டத்திலான கல்வித் தகைமையை கொண்டிருப்பவர்களுக்கிடையேயான உயர்மட்ட தொழிலின்மையும் தொடர்ந்து முன்வைக்கப்படும் பிரச்சினையாக காணப்படுகிறது.** இது சமூக அமைதியின்மை மனித வளங்களின் குறைப்பயன்பாடு மற்றும் எதிர்காலத்தில் நாட்டில் திறமையற்ற அனுபமற்ற தொழிற்படைக்கு வழியமைக்கும். நடைமுறையிலிருக்கும் தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மையைத் திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் வேலை இல்லாதிருக்கும் படித்த மற்றும் இளம் தொழிற்படையை கவனமாக தொழிலுக்கமர்த்தினால் பணிகள் துறையில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி அதிகரிக்கப்படும். தொழில் சந்தையிலான பொருத்தப்பாடின்மை அவர்களின் தேர்ச்சி தொழில்தருநர்களால் விரும்பப்படும் தேர்ச்சிகளுடன் ஒத்துப்போகும் வகையில் மீள ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். உயர் கல்வி உள்ளிட்ட நாட்டின் கல்வி முறைமை மீளஒழுங்குபடுத்தப்படவேண்டும். இதன் மூலம் இது சாதாரணமான வெளியீட்டை உற்பத்தி செய்யாமல் தனியார் துறையில் தொழிலுக்கமர்த்தத்தக்க உரிய தேர்ச்சிகள், போட்டித்தன்மை மற்றும் சுயநம்பிக்கையைக் கொண்ட தரமான தொழிற்படையை உற்பத்தி செய்யும்.